ஊர்காவற்றுறை பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 12 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்ரெம்பர் 22 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 01 | 1இ024இ907 | - | - |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 6இ600 | - | - | | |
| விடுபாடுகள் | | | | | 01 | 3இ492இ276 |
| வகைப்படுத்தல் வழு | 01 | 65இ500 | | | | |

ஆ. சபைக்கு சொந்தமான மூன்று வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்காமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 52இ342இ600 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 2002 ஆம் ஆண்டின் 14ம் இலக்க உள்நாட்டு | மீளாய்வாண்டின் அறவிடப்பட்ட பெறுமதி |

| | |
|---|---|
| இறைவரி சட்டத்தின் பெறுமதி சேர் வரி | சேர் வரிகள் ரூபா 18,515 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நாட்டை கட்டி யெழுப்பும் வரிச் சட்டம் | மீளாய்வாண்டின் அறவிடப்பட்ட ரூபா 14,046 நாட்டை கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக் களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| <u>1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி</u> | . |
| அத்தியாயம் ஐஐ பிரிவு 4 | ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டு பதிவேடு பேணப்படாததுடன் ஆதனவரி அறவீடு சபையினால் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 120 | உரிய திகதிகளில் முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளர் நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 580இ693 முற்பணக் கணக்கு மீதி சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| <u>இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் நிதி ஒழுங்குவிதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி 234 | 6 மாதங்களுக்கு மேல் மாற்றப்படாத ரூபா 3,000 பெறுமதியான காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| வடமாகாணசபை நிதி ஒழுங்குவிதி அத்தியாயம் 2 இன் பிரிவு 69ம் உபபிரிவு 69.1 | சபையின் டுபு 8958 ம் இலக்க பிக்கப் வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 391,256 இற்கு திருத்தம் செய்யப்பட்டிருந்தம் விபத்து தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| பெறுகை கைநூல் பிற்சேர்க்கை 19 இன் 9.3.1ம் பிரிவு | 252-6481 ம் இலக்க வாவன திருத்தங்கள் ரூபா 1,100,250 தொடர்பில் உள்;ராட்சி அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப் பட்டிருக்கவில்லை. |

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 456,003 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினமாக ரூபா 2,641,627 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 4,190,608 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 5,633,569 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (1)இறைகளும் வரிகளும் | 17 | - | - |
| (11)குத்தகை வாடகைகள் | 2,142 | 1,553 | 25 |
| 111)அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,023 | 364 | 4,616 |
| ( IV).வேறு வருமானங்கள | 26,321 | 23,396 | 4,590 |

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

---------------------------------------

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றிலிருந்து 2012, 2013ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 928இ382 பெறுமதியான நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத்தீர்வைக் கட்டணம்

----------------------------------------------

2006-2013 ஆண்டு காலப்பகுதியில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 3இ661இ430 வருமானமாக சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 வருமான முகாமைத்துவம்

--------------------------------------

வீதவரி அறவீடுகள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிலும் வீதவரி அறவீட்டிற்கு ஆக்கபூர்வமான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவுமில்லை. மொத்த வருமானத்தில் 87மூ நிலையான வைப்பு வட்டி வருமானத்திலும் வருமான நன்கொடையிலும் சபையின் செயற்பாடுகள் இடம் பெறுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

2.4 அங்கீகாரமற்ற கொடுப்பனவு

---------------------------------------------

ரூபா 1இ242இ500 பெறுமதியான 252-6481 இலக்கமுடைய பிக்கப் வாகனம் உள்;ராட்சி அமைச்சின் அங்கீகாரமின்றியும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் இன்றியும் மீளாய்வாண்டில் ரூபா 1இ100இ250 வாகன திருத்தம் செய்யப்பட்டிருப்பது அங்கீகாரமற்ற கொடுப்பனவாக அவதானிக்கப் பட்டுள்ளது.

2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

2.5.1 வாகனப் பயன்பாடு

i. வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் (சுசுயுே) கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வழங்கப்பட்ட ரூபா 600,000 பெறுமதியான 4 உழவு இயந்திரங்கள் பதிவிலக்கம், வாகனவரி மற்றும் வாகன காப்புறுதி செய்யப்படாது சபையில் காணப்படுவது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

ii. குறைப்பயன்பாடு

சபையின் 12 எண்ணிக்கையான வாகனங்கள் பயன்பாடின்றி காணப் படுவதனை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

iii. மானி வாசிப்பு பழுதடைந்த வாகனம்

சபையில் 4 எண்ணிக்கையான வாகனங்கள் மானி வாசிப்பு பழுதடைந்துள்ளமையால் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டு செலவினத்தினை கணக்காய்வில் கண்டறிய முடியாதுள்ளது.

iv. பயன்பாடற்ற வாகன திருத்த செலவினம்

1998ம் ஆண்டின் உள்;ராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 1,245,500 பெறுமதியான 252-6481 வாகனம் மீளாய்வாண்டில் ரூபா 1,100,250 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் 2013.07.23ம் திகதியிலிருந்து பழுதடைந்த வாகனம் பயன்பாடின்றி வாகன தரிப்பிடத்தில் காணப்படுகிறது. ஆயினும் 2014.03.31 ம் திகதிய 24ம் இலக்க தீர்மானப் பிரகாரம் வாகனம் ஏலத்தில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகன திருத்த செலவீனம் பயன்பாடற்ற செலவீனமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.6 ஒப்பந்த நிர்வாகம்

i. சபையினால் பாதிடப்பட்ட அலுவலக உள்ளகவீதி வேலை வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படாது 15.10.2013 ல் வேலையை ஆரம்பித்தமையால் குறித்த நிதியாண்டில் வேலை முடிவடையாது ரூபா 661இ032 பெறுமதியான மூலதன வேலைகள் எதிர்வரும் ஆண்டில் நிறைவேற்ற சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ii. முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

---

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்டு மக்களது பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 700இ000 பெறுமதியான மூன்று வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

2.7 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---

i. 2006-2010ம் ஆண்டுகளுக்காக உள்;ராட்சி ஆணையாளரினால் சனசமூக நிலைய வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 142,000 சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படாது ஏனைய வைப்புக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. 2002ம் ஆண்டில் அரச அதிபர் யாழ்ப்பாணத்தினால் வழங்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நிதி ரூபா 110,925 குறித்தொதுக்கப்பட்ட செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படாது ஏனைய வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.8 நோக்கத்திற்கு முரணான நன்கொடை பயன்பாடு

---

2002ம் ஆண்டு காலப்பகுதியில் அரச அதிபர் யாழ்ப்பாணத்தினால் சேரி ஒழிப்புத் திட்டம் மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 839இ075 கொல்கள புனரமைப்பு வேலைகளுக்கு மீளாய்வாண்டில் சபை தீர்மானப் பிரகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகள் பகுதிகளில விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

i. வரவு செலவுத் திட்டம்
ii. வருமான சேகரிப்பு
iii. வாகன பயன்பாடு
iv. நானாவித வைப்புக்கள்